**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 100/2013 |
| | | D/W's | : | DW 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | கார்த்தி | CASTE | : | – |
| D/O. | பாண்டிசேர்வை | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | குலசேகரன்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.01.2025**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் கூடுதலாக கீழ்க்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன்.

1. 18.10.1985 தேதியிட்ட பாகப்பத்திரம் – சான்றிட்ட நகல் – (இந்த ஆவணம் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்று ஆட்சேபணை செய்யப்பட்டு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

True copy
Sd/–Tr. M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **151/2009** |
| | | P/W's | : | **PW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | K.V. முருகேசன் | CASTE | : | – |
| S/O. | வேல்ச்சாமி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **65** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.01.2025**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வழக்குப்பற்றிய முழு விவரம் எனக்குத்தெரியும். சர்வே எண் 736/5, 736/6 ஆகிய சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 1924ம் ஆண்டு 1ம்வாதியின் தகப்பனார் சோமசுந்தரம்பிள்ளை ஏற்படுத்திய குத்தகை ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

2. வா.சா.ஆ.1 ஒத்திப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள 2வது தவசு சொத்திற்கு எனக்கு நான்குமால் எல்லை எனக்குத்தெரியும். வழக்கு 2ம்பட்டியல் சொத்தில் தெற்குப்பக்கம் சுடுகாடும், ரோடும் உள்ளது என்று பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் A Schedule, Item 1 என்று காட்டப்பட்ட சொத்தை 2019ம் ஆண்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. வழக்கில் 3ம் இலக்கச்சொத்திற்கு நான்குமால் எனக்குத்தெரியும். அந்தச்சொத்தின் வடபுறம் சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் பாதையாக காண்பித்துள்ள C Schedule சொத்து மோகனுக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. எனது இடத்திற்கு மேற்குப்புறம் சுடுகாட்டுக்கு செல்லும் பொதுப்பாதை உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 736/4க்கு மேற்குப்புறம் சுப்புராம் இடம் உள்ளது, அதற்கு மேற்குப்புறம் சாலை உள்ளது. சர்வே எண் 736ல் இடம் வைத்துள்ள அனைத்து நபர்களும் சுடுகாடு வழியாகத்தான் அவர்கள் இடத்திற்கு செல்வார்கள், தற்போது அந்தப்பாதை அடைக்கப்பட்டு உள்ளது.

4. சர்வே எண் 736 ல் இடம் வைத்துள்ள அனைத்து நபர்களும் வழக்குத்தாக்கல் செய்யவில்லை. A schedule சொத்தை சுற்றி 3 பக்கமும் வேறு 3 ம் தரப்பினர் இடம் உள்ளது, அந்த நபர்கள் அவர்கள் இடத்திற்கு செல்ல வேறு பாதை வைத்துள்ளார்கள். ஆதியில் சுடுகாடு பராமரிப்பு இல்லாமல் இருந்ததால் அனைவரும் அதை கடந்து நடந்து சென்றார்கள், தற்போது சுடுகாட்டை பராமரிப்பு செய்வதால் அதை தடுக்க பாதை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. சுடுகாட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் எங்களிடத்தில் கட்டவில்லை, அவர்கள் இடத்தில் சுடுகாட்டைச்சுற்றித்தான் கட்டினார்கள். இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையுடன் கூடிய வரைபடம் Ex,X.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 737 ல் சுடுகாடு மட்டும்தான் உள்ளது, அதில் பாதை உள்ளதாக, அரசு இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. எனது இடத்திற்கு பாதை இல்லாததால் பொது சுடுகாட்டில் பாதை உள்ளதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

True copy
Sd/–Tr. M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி